

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.3.2026) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் நடைபெற்ற விழாவில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதியில் பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானத்தையும், அப்பாவு நகர் மற்றும் சுப்புபிள்ளை தோட்டம் திட்டப்பகுதியில் 88.05 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 522 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும், இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் செட்டித் தோட்டம் திட்டப்பகுதியில் 45.63 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 243 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளையும் திறந்து வைத்து, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் சிட்கோ நகர் திட்டப்பகுதியில் 374.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1701 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதல்வர் படைப்பகம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் ந. பிரியா ரவிச்சந்திரன், வாரிய தலைமை பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.3.2026) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மறு கட்டுமானத் திட்டத்தின் கீழ், ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் டாக்டர் தாமஸ் சாலை திட்டப்பகுதியில் நடைபெற்ற விழாவில், சுபேதார் கார்டன் திட்டப்பகுதியில் 57.32 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 300 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும், அப்பாசாமி முதலி தெரு திட்டப்பகுதியில் 12.90 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 68 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும், பெரியபாளையத்தம்மன் கோயில் திட்டப்பகுதியில் 5.72 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 32 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும் திறந்து வைத்து, சென்னை, கிரீம்ஸ் சாலையில் உள்ள குடிசைகளை அகற்றி அப்பகுதி மக்களுக்கு வீடுகள் வழங்க 46.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 283 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ந. பிரியா ரவிச்சந்திரன், வாரிய தலைமை பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### எதைக்கண்டு பா.ஜ.க. அரசு அஞ்சுகிறது? ஒதுக்கப்பட்ட நிதி வீணாகும்!

# அகழ்வாராய்ச்சிக்கு ஒப்புதல் வழங்குங்கள்! கீழடி பேசட்டும்; வரலாறு மேலெழட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, மார்ச் 4 – எதைக்கண்டு பா.ஜ.க. அரசு அஞ்சுகிறது என்றும், ஒதுக்கப்பட்ட நிதி வீணாகுமே என்றும், அகழ்வாராச்சிக்கு ஒப்புதல் வழங்குங்கள், கீழடி பேசட்டும், வரலாறு மேலெழட்டும் என்றும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

கீழடி பேசட்டும், வரலாறு மேலெழுட்டும்!

கீழடி, ஆதிச்சனூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட எட்டு இடங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் உடனடி ஒப்புதல் வேண்டித் தமிழ்நாடு அரசு கடிதம் அனுப்பி 8 மாதங்கள் ஆகின்றன. இதற்கான முன்மொழிவுகள் ஜூலை 2025இல் அனுப்பப்பட்டு, நவம்பரில் இந்தியத் தொல்லியல் துறையின் தலைவர் தலைமையிலான கூட்டத்திலும் அது எடுத்துக்கொள்ளப்பட்டது. இருந்தும், 8 மாதங்களாகியும் ஒப்புதல் கிடைக்கவில்லை. மீண்டும் மீண்டும் நாங்கள் கோரிக்கை வைக்கிறோம். மீண்டும் மீண்டும் அது கண்டுகொள்ளப்படாமல் இருக்கிறது.

**பருவ மழையினால் களப் பணிகள் தடைபடும்!**

தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சியை மேற்கொள்வதற்கு உகந்த காலம் என்பது ஜனவரி முதல் ஜூலை வரைதான். இதைத் தவற விட்டால், பருவமழையினால் களப்பணிகள் தடைபடும், முக்கிய ஆராய்ச்சிகள் தாமதமாகும், 2025 2026ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியும் வீணாகும்.

**தமிழ்நாகரீகத்தின் தொன்மை!**

நான் கேட்க விரும்புவது... ஏன் இந்தத் தயக்கம்? தமிழ் நாகரிகத்தின் தொன்மை என்பது இந்தியாவுக்கு ஊறு விளைவிப்பதல்ல; இந்தியாவின் நாகரிகப் பண்பாட்டுக்குப் பெருமை சேர்ப்பது. எதைக் கண்டு பா.ஜ.க. அரசு அஞ்சுகிறது? அகழ்வாராய்ச்சிக்கு ஒப்புதல் வழங்குங்கள், வரலாறு பேசட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

# தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் - பிறந்தநாள் வாழ்த்து!

## சங்க நிர்வாகிகள் அறிக்கை!

சென்னை, மார்ச் 4 – தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் முதல்வருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து – அவ்வமைப்பின் தலைவர் ஆர்.சந்திரிகா, செயல் தலைவர் பெ.வஜ்ஜிரவேல், பொதுச்செயலாளர் ஆர்.கதிரவன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

எளிய மக்களின் குரலாய் திட்டங்கள் மூலம் தினம் தினம் மக்களைச் சந்திக்கும் தன்னிகரில்லாத் தலைவனாய் திராவிடப் பாசறையின் பெரும் புகழ்யாத்து நின்று ஐந்து ஆண்டுகளில் அழகு தமிழில் திட்டங்கள் வகுத்து அரசியலில் தனக்கென தனி அடையாளத்தையும், இடத்தையும் பிடித்து பகைவர்க்கும் 'அருள்வாய் நன்நெஞ்சே' என்பதை நிரூபித்துக் காட்டும் நிகழ்காலச் சூரியனாய்த் திகழும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெரும் புகழ் தமிழ் நிலத்தில் தமிழ் உள்ள அளவும் நிலைத்திருக்க அவர் பிறந்த இந்த இனிய நாளில் தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் வாழ்த்தி மகிழ்கிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் திருச்சியில் நடைபெறும் தி.மு.க மாநில மாநாட்டில் மாவட்டத்தில் இருந்து ஏராளமானோர் கலந்து கொள்வது குறித்து மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் இரா. இராஜேந்திரன், ஒன்றிய பகுதி கழக . செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட கழக பொருளாளர். மு.கார்த்திகேயன் மாநகர செயலாளர் பா. ரகுபதி ஆகியோர் உள்ளனர்.


